# காரைநகரில் புலிகள்-இராணுவம் உக்கிர மோதல்


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 சித்திரை 13 ஷவ்வால் 10 இதழ்: 75

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26-04-1991


(யாழ்ப்பாணம்)
காரைநகர்ப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று அதிகாலை வெளியேற முனைந்த போது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்கள்.

விமானப்படை, கடற்படையின் உதவியுடன் நேற்று அதிகாலை 4.30 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரையும் குண்டு வீச்சு நடத்திய வண்ணம் ஹெலி, பீரங்கிக்கப்பல்கள், 10 விசைப் படகுகளின் உதவியுடன் கனரக வாகனங்கள் சகிதம் முன்னேறி தோப்புக்காடு சீ-நோர் ஆகியபகுதிகளுக்கு வந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## நான்கு படையினர் மிதிவெடியில் காலிழப்பு

(திருமலை)
திருகோணமலை மாவட்டத்திலுள்ள உப்பாறு, ஆலங்கேணி ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து கடந்த 23ம் திகதி வெளியேறிய இராணுவத்தினர் சவாறு, ஆலங்கேணி ஆகியபகுதிகளிலுள்ள காட்டுப்பகுதிகளுக்கு முன்னேறினர்.

இவர்கள்மீது விடுதலைப்புலிகள் பரவலாக கடும் தாக்குதலைத் தொடுத்தனர். இதன் போது இரு இராணுவத்தினர் மிதிவெடியில் சிக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

# ஊர்காவற்றுறையில் ஆட்லறி ஷெல் தாக்குதல்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேர் துடி துடித்து மரணம்!

[யாழ்ப்பாணம்]
பலாலியிலிருந்து ஊர்காவற்றுறைநோக்கி நடத்தப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலினால் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த ஏழுபேர் துடிதுடித்து ஸ்தலத்திலேயே பலியானார்கள். மேலும் ஒருவர் ஆஸ்பத்திரியில் மரணமானார். பலர் காயமடைந்தனர்.

நேற்று நண்பகல் 2-30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஊர்காவற்றுறைப் பகுதியை நோக்கி தெற்கு நோக்கி ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் வீழ்ந்து வெடித்ததில் ஒருவீட்டிலிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேர் கொல்லப்பட்டனர்.

லாசர் லீனப்பு (45 வயது) லீனப்பு விறிஸிலிற்றம்மா (40 வயது), இவர்களது பிள்ளைகள் யூலிடஸ் (16-வயது) ரீட்டா 14-வயது யூஜ்ஜின் [10-வயது] சுவர்ணா (9 வயது), திரேசா (5 வயது) ஆகியோர் ஸ்தலத்திலே துடிதுடித்து பலியானார்கள் மெற்றில்டா (12 வயது) என்பவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

சவுரி றப்பியர் [வயது 75], அருள்சீலன் (15 வயது) ஆகியோர் உட்பட பலர் இத்தாக்குதலில் காயமடைந்தனர். இறந்தவர்களின் வீடுகள் உட்பட பல வீடுகள் சேதமடைந்தன. (56)

ஊர்காவற்றுறையில்

## படையினர் மீது புலிகள் பலத்த தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினரை வழிமறித்து விடுதலைப்புலிகள் நேற்று கடுந்தாக்குதலை மேற்

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழர்களுக்கு

## உரிமை வழங்குவதன் மூலம் இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்கலாம்

## கிட்டு பேட்டி

(லண்டன்)
தமிழர்களுக்கு உரிமையை வழங்கினால் இலங்கைத்தமிழர் பிரச்சினையை சுலபமாகத்தீர்க்கலாம் என்று விடுதலைபுலிகள் இயக்க பிரமுகர் கிட்டு [சதாசிவம் கிருஷ்ணகுமார்) லண்டன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்

அப்பேட்டியில் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டும் என்று விரும்புகிறேம் இதற்கு முடிவு காண வேண்டும் என்பதற்

(4-ம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கிய சிறுமி

[வவுனியா]
வவுனியா மாவட்டம் பூந்தோட்டம் பகுதியில் இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்ட மிதிவெடியில் சிக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான பதில் எதுவும் கிடைக்கவில்லை

(கொழும்பு)
விடுதலைப்புலிகளிடமிருந்து பேச்சு வார்த்தைக்கான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு கூறினர்.

## நான்கு முகாம் பகுதிகளில் மோதல்கள் வெடித்தன!

[கொழும்பு]
பலாலி, ஆனையிறவு, காங்கேசன்துறை, காரைநகர் ஆகிய பகுதிகளிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம் பகுதிகளில் நேற்று புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே கடும் சண்டை மூண்டதாக பி.பி.ஸி. கொழும்பு செய்தியாளர் தெரிவித்தார்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க. பொ. த. [உயர்தர] பரீட்சைக்காக இரு நாட்களாக நிறுத்தப்பட்டிருந்த மோதல்கள் நேற்று மீண்டும் வெடித்தன என்றும் அவர் மேலும் கூறினர். (ரி)

காங்கேசன்துறை, ஆனை

(4-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையத்திற்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)
கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக ஊழியரைக் கைது செய்து, தடுத்து வைத்திருந்த கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பதில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்தார்.

இந்தியப் பத்திரிகையாளர் ஒருவர் மீதும், தூதரக ஊழி

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் தொழிலாளர் ஆதரவு விடுதலைப் புலிகளுக்கே

(யாழ்ப்பாணம்)
சிறீலங்கா அரசு தமிழினத்திற்கு எதிராகப் பிரகடனப் படுத்திய யுத்தத்தையும், தமிழர் கல்விக்கு எதிரான ஒடுக்கு முறையையும் கண்டிக்க தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கே தமிழ் தொழிலாளர் வர்க்கம் தனது ஆதரவினைத்தெரிவிக்கின்றது என்பதைச் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்த தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்பாடு செய்யப்படும்மேதினப்பேரணியில் இ. த. ஆ. ச. இணைந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்குச்சட்ட வேளையிலும் பரீட்சைகள் நடைபெற்றன

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நேற்று அமுல் செய்யப்பட்டபோதும் க. பொ. த. உயர்தரப் பரீட்சைகள் பாடசாலைகளில் நடைபெற்றன.

நூறுவீதமான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருப்பதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பரீட்சையை குழப்புவதற்காகவே அரசாங்கத்தால் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக மாணவர்கள் கவலைதெரிவித்தனர். (152)

## சிங்கள கிராமங்களுக்கு தீவிரமான பாதுகாப்பு

[கொழும்பு]
மொனராகலை, அம்பாறை மாவட்டங்களில் மேலதிகமாக பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் ஊர்காவல் படையினரும் பெருமளவில் குவிக்கப்படவுள்ளனர்.

[4ம் பக்கம் பார்க்க]

# கால்நடை உற்பத்தி குறுகியகாலபயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கால்நடை உற்பத்தி, குறுகிய காலப் பயிற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

இவ்வாறு யாழ். கால்நடை வைத்திய அதிகாரி சுற்றறிக்கை மூலம் தெரியப் படுத்தி உள்ளார்.

மேலும் அச்சுற்றறிக்கையில், வைக்கோல் பதனிடல் முறை, கலவைத்தீன் தயாரித்தல், நோய்த் தடுப்பு முறை தடுப்பூசி ஏற்றல், செயற்கை முறை சினைப்படுத்தல், கூட்டுறவுப் பண்ணை அமைத்தல், சந்தைப் படுத்தல், ஆடு கோழி முயல் வளர்ப்பு, கறவைப்பசு வளர்ப்பு, தீவன பயிர்ச் செய்கை ஆகிய பயிற்சிகள் இப் பயிற்சியில் இடம் பெறவுள்ளன.

இப் பயிற்சியில் சேரவிரும்புவோர், கால்நடை வைத்திய அதிகாரி யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர். (152)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

இயற்கை வழியே சுக வாழ்வுக்கு ஏற்றம் தரும் இயற்கை வளம் கொண்டு தயாரித்த ஒலிவ் ஸ்நானப் பவுடர் எண்ணெய்க் குளியலுக்குச் சிறந்தது. சிரசு, கண், உடலுக்கே குளிர்ச்சி தருகிறது. இதுவும் ஒரு மில்க்வைற் உற்பத்தி. பக்கெற் ஒன்று ரூபா 1-50 மட்டுமே. [ஏ 1244]

### சோபிதா புத்தகசாலை

யாழ். நகரில் நியாய விலைக்கு அப்பியாசக்கொப்பிகள், பாடநூல்கள், பாடசாலை உபகரணங்கள், மீரா வெளியீடுகள் அனைத்துக்கும் சிறந்த ஸ்தாபனம் சோபிதா புத்தகசாலை, 363, கே. கே. எஸ் வீதி (முட்டாசுக்கடைச் சந்தி), யாழ்ப்பாணம், (சி 4670)

## நிவாரணம் வழங்க ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பதினால் இம் மாதம் 13 ம், 23ம் தேதிகளில் கிராம சேவகர் பிரிவுகளில் அன்று நிவாரணம் பெறாதவர்கள் இன்று 26ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம்.

## மர விதைகள்

(யாழ்ப்பாணம்)

மரம் நடுகைத்திட்டத்திற்கென மரக்கன்றுகளை உற்பத்தி செய்யும் முயற்சிகளில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது. வாகை, எலும்புருக்கி, கொக்குமந்தாமரை, திருக்கொன்றல் போன்றமரங்களின் விதைகள் சேகரிக்க வசதியுள்ள பொதுமக்கள் இவை தமிழீழ ஆய்வு நிறுவனத்திடம் கொடுத்துதவுமாறு வேண்டப்படுகின்றனர்.

## குடும்பத்திற்கு 1/2 லீற்றர் மண்ணெண்ணை

(கொழும்புத்துறை)

யாழ் ப. நோ கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் ஒரு குடும்ப அட்டைக்கு அரை லீற்றர் வீதம் மண்ணெண்ணை வழங்கப்பட்டது. (154)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் தேர்த் திருவிழா நாளை 27ம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது.

தீர்த்தத் திருவிழா அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது. இக் கோவில் ஜனவரி மாதம் இராணுவ நடவடிக்கையினால் பாரிய சேதமடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது (153)

## கூட்டம்

[கொழும்புத்துறை]

குருநகர் சென் ஜேம்ஸ் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கப் பணிமனையில் நாளை 27ம் திகதி சனிக்கிழமை பி.ப. 4-30 மணிக்கு தலைவர் திரு. மோ. எட்வேட்ஸ் தலைமையில் நடைபெறும். (154)

## நியமனம்

(கொழும்புத்துறை)

யாழ். சென் சால்ஸ் மகா வித்தியாலய அதிபராக யாழ். சென் யோசப் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய திரு. ஆர். அருளானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார். [144]

## தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வல்லை, மண்டான் பகுதியை நோக்கி நேற்றுமுன் தினம் பி. பகல் 12-30 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று ஹலிபர் தாக்குதலை நடத்தியுள்ளது.

## இராசி பலன்

26-04-1991

வெள்ளிக்கிழமை

திரியோதசி பி. இ. 2-10 வரை, உத்தரம் மு. ப. 10-45 வரை. இராகுகாலம் 10-29 முதல் 11-59 வரை, சுப நேரம் காலை 5-59 முதல் 7-29. பிரதோச விரதம்.

மேடம்; தொழில் சிறப்பு, குடும்பசுகம், இனசன உதவி.

இடபம்: மறைமுகத் தொல்லை, பண நெருக்கடி, வாக்கு விரோதம்.

மிதுனம்: மன வேற்றுமை வேலைப்பழு, குடும்பக்கவலை.

கடகம்: தான தர்மம், தொழில் லாபம், குடும்ப மகிழ்ச்சி.

சிங்கம்: மன வேதனை, தொழில் பிணக்கு, கடன் சுமை.

கன்னி; தொழில் விவேகம் குடும்ப உறவு, அதிகயோசனை

துலாம்: பண வரவு, தொழில் பாராட்டு, குடும்பத்தில் சுப ஜெயம்.

விருச்சிகம்: அந்நியர் பகை பயணங்களால் துன்பம், மறதி

தனுசு: தொழில் பிணக்கு, குடும்ப தகராறு, குறை கேட்டல்.

மகரம்; குடும்பப் பிரிவு, அந்நிய வாசம், அவமதிப்பு.

கும்பம்: பெண் பகை, வாக்குவன்மை, கடன் வரவு.

மீனம்: குடும்ப சுகம், புத்திரர் மகிழ்ச்சி, புதிய செய்தி.

• ஜோஸ்யர்

---

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் 25-5-1991 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர் அவற்றினை 15-5-1991க்கு முன்னதாக எழுத்துமூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கும்படியும்,

மதியஉணவில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் 15-5-1991க்கு முன்னர் ரூ. 30/ஐ உபபொருளாளர் திரு. ந. உலகநாதனிடம் செலுத்தி உதவும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிகழ்ச்சிநிரல் அங்கத்தவர்களுக்கு அழைப்பிதழுடன் அனுப்பிவைக்கப்படும்.

சுந்தரம் டிவகலாலா,
செயலாளர்

யா. இ. க. (எ-1246)

---

# 31வது நாள் நினைவஞ்சலி



ப. அழகுமலைச் செட்டியார்

(பி. ஏ. அன் சன்ஸ் உரிமையாளர்)

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

617, கே. கே. எஸ், வீதி.
யாழ்ப்பாணம். (சி-4662)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பொன். செல்லப்பாக்கியம்

[வேலில் ஒழுங்கை, வல்வெட்டி]

உதயம்: 15-10-1908

உதிர்வு: 28-04-1991

எமது குலவிளக்காய் திகழ்ந்து தன் பின் வாழ்க்கையை வேவில் ஆலயத்திருப்பணிக்கு உகந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு இறையடி சென்ற எம் அன்னை அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து 27-4-1991 அன்று அதிகாலை நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையிலும் அன்றைய மதிய போசனத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மு. கு.: தனிப்பட்ட அழைப்புகள் இல்லை
[M. P. தருமலிங்கம்]
[நியூஸ் ஏஜன்ட், உடுப்பிட்டி]

மக்கள், மருமக்கள்.

[ஏ-1243]

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 17 - 10 - 1922

இறப்பு: 27 - 03 - 1991

அ. சின்னத்துரை

முன்னாள் இராணுவ உத்தியோகத்தரும் வசந்தகான சபா நடிகருமான "பபூன்" அ. சின்னத்துரை அவர்களின் 31-வது நாள் அந்தியேட்டிக் கிரியை அவரது இல்லத்தில் 26-04-91 (இன்று) வெள்ளிக்கிழமை நடைபெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்,

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
வ. செபஸ்தியாம்பிள்ளை

கல்லூரி வீதி,
பருத்தித்துறை. (சி-4679)

# உள்ளூர் தாவரங்கள் கொண்டு கிருமிநாசினி தயாரிக்கலாம்

பயிர்ச் செய்கையில் சிறந்த விளைவுகளைப்பெற பசளைப் பிரயோகமும், பீடைநாசினிகள் மூலம் பயிர்ப்பாதுகாப்பும் இன்றியமையாதவை. இன்று செயற்கை உரங்களினதும், கிருமிநாசினிகளினதும் விலைகள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. அத்துடன் இந்த செயற்கை நாசினிகளின் உபயோகத்தால் ஏற்படும் நச்சு அபாயங்கள், சுகாதாரச் சீர்கேடுகள், சூழல் மாசடைதல் போன்ற தீமைகள் அதிகம் ஏற்படுகின்றன. பொருளாதாரத்தடை காரணமாக கொழும்பிலிருந்து வரும் இப்பொருட்களைப் பெற தமிழீழ விவசாயிகள் பெரும் சிரமங்களையும் கஷ்டங்களையும் எதிர்கொள்கின்றனர்.

இந்நிலையில் உடனடியாக இதற்கான மாற்றீடுகளைக் கண்டுபிடித்து அறிமுகம் செய்வது அவசியமாகின்றது. செயற்கைக் கிருமிநாசினிகளுக்குப் பதிலாக தமிழீழத்தில் கிடைக்கும் தாவரப் பொருட்களைக் கொண்டே கிருமிநாசினிகள் தயாரித்துக் கொள்ள முடியும்.

1. சோமக்கிளுவை:- இதன் இலை, கனி, பட்டை, வேர், விதை என்பன பயன்படுத்தக்கூடிய பாகங்களாகும்.

தயாரிக்கும் முறை:- உடன் பறித்த 4 சாக்கு இலைகளை ஒரு ஏக்கர் நிலப் பரப்பில் எங்கும் பரவும்படி விசிறிவிடவும். இது பூச்சிகளை விலக்குவதுடன் பசளையாகவும் பயன்படும். காய்கறித் தோட்டத்தில் இதன் கிளைகளை வெட்டி பரவுவதால், பூச்சிகளின் தாக்கங்களைக் குறைக்கலாம். இலைகளை அரைத்து பிழிந்த சாற்றை ஒரு பாகத்திற்கு 5 பாகம் நீர் கலந்து கிழமைக்கு ஒரு முறை கையினால் பயிர்களுக்குத் தெளித்துவரலாம். பலவகைப் பூச்சிகளையும், எலி, தெள்ளு என்பவற்றையும் உணவு உட்கொள்ள விடாது இது தடைசெய்யும். அழுக்கணவான், கோரைப் புழு, கூடுதாங்கிப்புழு, தெள்ளு, நெல்சுருள், ஈ என்பவற்றையும் இது கட்டுப்படுத்தும்.

(2) பேரத்தை:- இதில் உபயோகிக்கப்படும் பாகம் கிழங்கு ஆகும். இக்கிழங்கில் 1 கிலோ, பச்சை வேப்பிலை $1\frac{1}{2}$ கிலோ, சிற்றனெல்லா புல் 1 கிலோ ஆகியவற்றைச் சிறு துண்டுகளாக்கி உரலிலிட்டு இடித்து 15 லீற்றர் நீரில் 12 மணித்தியாலங்கள் ஊறவிடவும். பின்பு நன்றாக பிழிந்து வடித்தெடுக்க வேண்டும். இந்த அடர் சாற்றில் ஒரு லீற்றருக்கு 30 லீட்டர் நீர் கலந்து விசிறலாம்.

1 ஹெக்டேரில் உள்ள நெற்பயிருக்கோ வேறு பயிருக்கோ விசிறப் போதுமானது. (ஏக்கருக்கு 60- 80 லீற்றர்)

மூளைத்த அல்லது நாற்று நட்டு 15ம், 30ம், 45ம், 60ம் நாட்களில் நெற்பயிருக்கு இக்கலவை விசிறலாம். இக்கலவையை பல பூச்சிகளைக் கொல்வதுடன் அவை தாவரங்களை அணுக விடாது தடை செய்யும்.

-தமிழீழ ஆய்வு நிறுவனம்

## மடு அகதிமுகாமில் தங்கியுள்ளோர் விபரம்

(மன்னார்)

இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து மடு அகதிமுகாமில் தங்கியுள்ள அகதிகள் தொகை வருமாறு: (01- 06-90 முதல் 20-04-91 வரை)

| மாவட்டம்: | குடும்பங்கள்: | அங்கத்தவர்தொகை: |
|---|---|---|
| மன்னார் | 1369 | 5422 |
| வவுனியா | 2240 | 8971 |
| முல்லைத்தீவு | 345 | 1356 |
| யாழ்ப்பாணம் | 138 | 538 |
| கிளிநொச்சி | 33 | 116 |
| திருமலை | 194 | 733 |
| மட்டக்களப்பு | 21 | 68 |
| ஏனையவை | 07 | 12 |
| மொத்தம் | 4.341 | 16,916 |

01-04-91 முதல் 20-04-1991வரை மடு அகதிமுகாமில் தங்கியுள்ளோர் விபரம்:

| மாவட்டம்: | குடும்பங்கள்; | அங்கத்தவர்தொகை: |
|---|---|---|
| மன்னார் | 2229 | 7936 |
| வவுனியா | 960 | 3760 |
| முல்லைத்தீவு | 10 | 20 |
| யாழ்ப்பாணம் | 22 | 55 |
| கிளிநொச்சி | 05 | 27 |
| திருகோணமலை | 08 | |
| ஏனையவை | 01 | 01 |

தற்போது மடு அகதி முகாமில் தங்கியுள்ள அகதிகள் விபரம்:

| மாவட்டம்: | குடும்பங்கள்: | அங்கத்தவர்தொகை: |
|---|---|---|
| மன்னார் | 3508 | 13,358 |
| வவுனியா | 3204 | [illegible] |
| முல்லைத்தீவு | 345 | 1,376 |
| யாழ்ப்பாணம் | 160 | 593 |
| கிளிநொச்சி | 38 | 148 |
| திருகோணமலை | 202 | 760 |
| மட்டக்களப்பு | 21 | 68 |
| ஏனையவை | 08 | 15 |
| மொத்தம் | 7,576 | 28,742 |

(ஈ)

## விளையாட்டுத்துறை மனிதனை பண்படுத்துகிறது

(பருத்தித்துறை)

''விளையாட்டுத் துறைகளில் சாதனைகள் புரிந்து முன்னணியில் திகழ்பவர்கள் சர்வதேச ரீதியாக புகழீட்டிக் கொள்ள முடிவதுடன் வாழ்க்கையிலும் வெற்றி பெற்றுக் கொள்ள முடியும். மனிதனை பண்படுத்துவதற்கு விளையாட்டுத்துறை சிறந்த சாதனமாகும்.''

இவ்வாறு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. செல்ல ஸ்ரீனிவாசன் கூறினார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இவ்விழாவை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. நகுலேஸ் புலிக்கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரி திரு எஸ். திருச்சிற்றம்பலம் தலைமை தாங்கினர். தொடர்ந்து உரையாற்றிய திரு. செல்ல ஸ்ரீனிவாசன் குறிப்பிட்டதாவது:

விளையாட்டுக்களில் ஈடுபடும் இளைஞர் யுவதிகள் தோல்வியைக் கண்டு தளர்ந்து விடக்கூடாது. அடுத்த வெற்றிக்கான முயற்சிகளை மேற்கொள்ளும் போது வெற்றி பெறமுடியும். விளையாட்டுக்களில் வெற்றியீட்டிய இளைஞர் யுவதிகளைகள் தமது விளையாட்டுத்துறை நடவடிக்கைகளை மேலும் அபிவிருத்தி செய்து விளையாட்டுத்துறையில் சாதனைகளைப் புரிய வேண்டும்' என்றார். (52)

### க. பொ. த. உயர்தர பரீட்சை
## மன்னாரில் இரு நிலையங்களில் நடந்தது

[மன்னார்]

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடந்த 23-ம் திகதி ஆரம்பமான க. பொ. த. (உயர்தர) பரீட்சை மன்னார் மாவட்டத்தில் இரு பரீட்சை நிலையங்களில் மட்டும் நடைபெற்றது.

சுமாரி 636 பரீட்சார்த்திகள் மட்டுமே இம்மாவட்டத்திலிருந்து தோற்றினார்கள்.

மன்னார் புனித சவேரியார் மகளிர் வித்தியாலயத்தில் 460 பரீட்சார்த்திகளும், மடு அகதி முகாமில் 175 பரீட்சார்த்திகளும் தோற்றினர்.

விஞ்ஞானப் பிரிவுக்கு எட்டு மாணவர் மட்டுமே தோற்றினர். பிரயோக கணிதத்திற்கு 3 பேரும், விலங்கியலுக்கு 5 பேரும் தோற்றியுள்ளனர். இப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளோரில் பெரும் பகுதியினர் கலைப் பிரிவைச் சேர்ந்தோராவர். (ஈ)

## தமிழ்நாடு தேர்தல் களம்

### 166 வேட்பு மனுதாக்கல்

மதுரை மாவட்டத்திலுள்ள 15 சட்டபேரவை தொகுதிகளுக்கு 166 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. வேட்புமனுக்கள் தாக்கலாகியதை தொடர்ந்து பிரசார வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### சேலத்தில் கல்வீச்சு

சேலம் ஆட்சிதலைவர் அலுவலகத்தின் முன்னும் நடந்த கல்வீச்சு சம்பவத்தில் பலர் காயமடைந்தனர். வேட்பு மனு தாக்கல் செய்யசென்ற வேட்பாளர்களுடன், ஆதரவாளர்களையும் அலுவலகத்திற்குள் செல்ல பொலிஸார் அனுமக்காததை தொடர்ந்து இக்கல்வீச்சு நடந்தது.

### மதுரையில் ஒருவர்காயம்

மதுரை ஆட்சித் தலைவர் காரியாலயத்தின் முன் அ. தி. மு. க. தொண்டர்களுக்கும், தி. மு. க. தொண்டர்களுக்குமிடையில் நடந்த மோதலில் ஒருவர் காயமடைந்தார்.

### காஞ்சிபுரத்திலும்

காஞ்சிபுரத்திலும், வேட்புமனுதாக்கல் செய்த சாயம் வன்முறை சம்பவங்கள் இடம் பெற்றது. இச்சம்பவத்தில் சிலர் காயமடைந்தனர்.

### அமைதியாக நடந்தது

திண்டுகல் பகுதியில் அமைதியான முறையில் வேட்பு மனுத்தாக்கல் இடம் பெற்றது. எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை என தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

### விளம்பரங்கள்

அமைதியாக தேர்தலில் பங்குபற்றுமாறு மக்களை கோரும் சுவரொட்டிகளும் விளம்பரங்களும் தயாராகி வருகிறது. தேர்தல் ஆணையாளர் இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார்.. எழுத்தறிவில்லாத மக்களுக்காக சித்திரங்களை கொண்ட விளம்பரங்களும் தயாரிக்கப்படுகிறது.

### தி. மு. க. தேர்தல் விஞ்ஞாபனம்

தி மு. க நேற்று தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது. ஏழைமக்களுக்கு பல சலுகைகள் வழங்கப் போவதாகவும் பல முன்னேற்ற திட்டங்களை ஆரம்பிக்கப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிரமதானம் மூலம் வீதி புனரமைப்பு

(கிளிநொச்சி)

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிரமந்தனாறு, மயில்வாகனபுரம் கிராமங்களுடாக சுண்டிக்குளம் வீதி ஊடாக இணைக்கும் பிரதான பாதையை பாரிய சிரமதானம் மூலம் சுமார் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் புனர்நிர்மானம் செய்தனர்.

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் சதா. தனபாலசிங்கம் தலைமையில் இச் சிரமதானம் நடைபெற்றது.

புளியம் பொக்கனை சிரமதானசபை செயலாளரும் கிராமசேவையாளருமான எஸ். எஸ். சின்னத்தம்பி சிரமதான ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்திருந்தார்.

உதவி அரச அதிபர் சதா தனபாலசிங்கம் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

இன்றைய சூழ்நிலையில் வீதிகள் சீர்செய்யம்படாமல் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டு மக்கள் பலவித சிரமங்களையும் சொல்லெனுத் துயரங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இக்குறைபாட்டை போக்க மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த வீதியை பாரிய சிரமதானம் மூலம் செப்பனிட முன்வந்த சிரமதான சபையினரையும் சிரமதான தொண்டர்களையும் நான் வெகுவாக பாராட்டுகிறேன்என்றார் (63)

### நீர்வேலி
## கந்தசுவாமி கோவில் ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் நாளை 27-ம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு விசேட பூசையைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு ரதோற்சவம் இடம்பெறும்.

பிற்பகல் 2-00 மணிக்கு சண்முகார்ச்சனையும் அதனைத் தொடர்ந்து பச்சை சாத்தி ரதவாரோகணமும் நடைபெறும். சிறப்பு நிகழ்ச்சியாக நாதஸ்வரக்கச்சேரி, கூட்டுப் பிரார்த்தனை முதலியனவும் இடம்பெறும்.

### ★ குவைத் வீதிகளில்
## ஆயுதம் தரித்த கோஷ்டி இலங்கையர் மீது தாக்குதல்

(வாஷிங்டன்)

ஆயுதம் தாங்கிய குவைத் கோஷ்டியினர் குவைத்தில் உள்ள இலங்கையர் மீது மோசமான தாக்குதலை நடத்தி வருவதாக 'வாஷிங்டன் டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

பயங்கர ஆயுதங்களுடன் திரியும் கோஷ்டியினரே வீடுகளின் கதவுகளைத் தட்டி வெளியே வரும் இலங்கையரை ஆண், பெண் வித்தியாசமின்றி மோசமாகத் தாக்கி வருகின்றனர்.

50க்கும் மேற்பட்ட இலங்கைப் பெண்கள், கடத்தப்பட்டுமுள்ளனர். இலங்கையர் பலர் கொலைப்பட்டிருக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது.

இது குறித்து குவைத்தில் உள்ள ரோமன் கத்தோலிக்க குருமாரும் கவலை தெரிவித்துள்ளனராம். (இ)

# ஆசிரியர்களுக்கான கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ்ச்சேவைக்காலஆசிரியர் ஆலோசகர்களுக்கு கல்வித் திணைக்களத்தால் நாளை 27ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடாத்தவுள்ள தமிழ்மொழிக் கல்விக் கருத்தரங்கில் சகல தமிழ்சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்கள் கலந்து கொள்ளும்படி கல்விப் பணிப்பாளர் வேண்டுகின்றார்.

## புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இன்று 26-ம் திகதி நடைபெறும்.

## பதினையாயிரம் விவசாயிகளுக்கான

# கடன்திட்டம் தோல்வி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள பதினையாயிரம் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியஉற்பத்தி தோல்வியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான விதை தானியங்கள் மற்றும் உதவிப் பொருள்கள் உரிய காலத்தில் வழங்கப்படாமையினாலேயேஇவ் உற்பத்தி தோல்வியடைந்தது.

சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இவர்களுக்கு கடன் அடிப்படையில் உதவியமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக உதவுவதற்கென யுனிசெவ் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இந்த உதவி குறிக்கப்பட்ட நிறுவனங்களினால் கடன் அடிப்படையில்விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இக்கடன் திட்டத்தில்கடன் பெற்ற விவசாயிகள் சிறுதானியச் செய்கை பாதிக்கப்பட்டதனால் தமது கடன்மீளவழங்க முடியாத நிலையிலுள்ளனர். (பூ)

## நான்கு படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கால்களை இழந்தார்.

இத்தாக்குதலினால் ஏற்பட்ட இராணுவ சேத விபரம்தெரிய வரவில்லை.

மறுநாள் உப்பாறுபகுதிக்கு வந்த இராணுவத்தினரில் இருவர் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கிக் கால்களை இழந்தனர்.

திரும்பிச் செல்லும்போது பொதுமக்கள் சிலரைக் கைது செய்து சென்றனர், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரையும் தெரியவில்லை. [பூ]

## பேச்சுக்கான

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பிறவு, காரைநகர் உட்பட பலபகுதிகளிலும் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில் மோதல் இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறினர். (ரி)

## தமிழ் தொழிலாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளத் தீர்மானித்துள்ளதாக சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தொழிலாளர்களின் ஒற்றுமையைஉலகுக்குணர்த்த சகல தமிழர் தொழிற்சங்கங்களையும் இப்பேரணியில் இணையுமாறு இ. த. ஆ சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

# விளையாட்டு வீராங்கனை பி. டி. உஷா திருமணம்

(புதுடில்லி)

இந்தியாவின் பிரபல விளையாட்டுத்துறை வீராங்கனை பி. டி. உஷாவின் [26-வயது] திருமணம் நேற்று கேரள மாநிலத்தில் நடைபெற்றது.

பி. டி. உஷாவின் கணவர் பீ. வி. சீனிவாசன் மத்திய தொழில் பாதுகாப்புப் படையில் சப். இன்ஸ்பெக்டராகப் பணிபுரிந்து வருகிறார்.

இந்தியப் பிரதமர் சந்திரசேகர் உட்படப் பலர் பி. டி. உஷாவின் திருமணத்திற்குத் தமது வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர். [ரி]

# "தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆசிரியர் பங்களிப்பு மிக அவசியம்"

(உடுவில்)

எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆசிரியர் பங்களிப்பு மிகவும் அவசியமானது. போராட்டத்தில் இருந்து ஆசிரியர்கள் விலகி, ஒதுங்கி வாழ முற்படக்கூடாது. எதிர்வரும் மேதினத்தில் ஆசிரியர்கள் அதிகளவில் பங்கு கொண்டு போராட்டத்தில் தம்பங்களிப்பை வெளிக்காட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற மருதனார்மடம்கல்விக்கோட்ட அதிபர்களுக்கிடையேயான கல்விசம்பந்தமான கலந்துரையாடலில் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த அருண் மாஸ்டர் கலந்து கொண்டு இவ்வாறு உரையாற்றினார்.

மருதனார்மடம் கல்விக் கோட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த தொழில்நுட்பக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது;

எமது பிரதேச கல்விநிலை நாம் எதிர்பார்த்த அளவுக்கு விருத்தியடையவில்லை தற்போதையதும் எதிர்கால நிலைகளையும் அதிபர்கள் நன்கு ஆராய்ந்து கல்வியை விருத்தி செய்ய முற்படவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 3000 ஆசிரியர் நிரந்தரப் பற்றாக்குறையாக உள்ளனர். சமனற்ற வளப்பங்கீடுகள் நிலவுகின்றன. ஆசிரிய பற்றுக்குறை நீக்கி வளங்களைச் சமனாகப் பங்கீடு செய்து சகல பாடசாலைகளிலும் கல்விநிலை சீராக்கப்பட வேண்டும்.

கல்வியில் சாதனைமட்டம் தேவைப்படுகின்றது. அதனை எவ்வாறு செய்யமுடியுமோ அவ்வாறு செய்ய அதிபர்கள் பின்நிற்கக்கூடாது.

கல்வி அதிகாரிகள் திருவாளர்கள் எஸ். ரட்ணசாசா, எஸ். பொன்னம்பலம் உட்படக் கொத்தணிப் பாடசாலை அதிபர்கள் பலரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். [109]

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மே தினத்தை முன்னிட்டு முக்கிய முடிவினை எடுப்பதற்காக யாழ். மாவட்ட தனியார் கல்வி நிலைய கோட்டரீதியான பிரதிநிதிகளும், அங்கத்தவர்களும் இன்று 26ம் திகதி வெள்ளிக்கிழமை பி. 3 மணிக்கு யா/மங்கையற்கரசி வித்தியாலய மண்டபத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் தனியார் கல்வி நிலையப் பொதுச்செயலாளர் வேண்டியுள்ளார்.

## ஷெல் வீச்சு

[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம், கட்டுவன், வசாவிளான் பகுதிகளில் ஷெல் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் நேற்றிரவுவரை கேட்டபடி இருந்தன.

பலாலி இராணுவ முகாமில் இருந்து தீவுப்பகுதியை நோக்கி ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

## காரைநகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேறி வந்த இராணுவத்தினரை இடைமறித்து புலிகள் தாக்குதலை தொடுத்தனர்.

இருபகுதியினரிடையேயும் நடைபெற்ற இம்மோதலில் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றித் தெரியவில்லை

விடுதலைப்புலிகள் தரப்பில் குமார் என்னும் போராளி வீரமரணமடைந்தார்.

இவருக்கு புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். [பூ]

## தமிழர்களுக்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

காகத்தான் போராடிக்கொண்டிருக்கிறோம். இதற்கு முடிவு ஏற்படுவது சிறிலங்காவினுடைய கையில்தான் இருக்கிறது. ஒருநிரந்தரமான அமைதியைத்தான் நாங்கள் விரும்புகிறோம்.

இந்தியா தமிழ் மக்களுடைய தீர்வு பற்றி தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவிடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வருமாக இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளுவோம்.

சிங்களவர்களுக்கு ஒரு சிங்களநாடு இருப்பதுபோல் தமிழர்களுக்கென்றும் தமிழீழம் அமையவேண்டும். அந்த அடிப்படையில்தான் பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும். இதன்மூலம்தான் ஒரு நிரந்தர தீர்வைப் பெறமுடியும். (ரி)

# புலிகள் கடும் தாக்குதல் சிப்பாய்பலி ஆயுதங்கள்மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தனிக்கல்லி அரியகுடையான் ஆகிய இராணுவ முகாம்களுக்கிடையிலுள்ள காவலரண்கள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதல் காலை 3-30 மணியிலிருந்து 5 மணிவரை இடம்பெற்றது.

இத்தாக்குதலினால் காவலரண்களில் நின்ற இராணுவத்தினர் நிலைகுலைந்து காவலரண்களைவிட்டு இராணுவ முகாம்களுக்கு ஓடிவிட்டனர். ஒரு இராணுவ சிப்பாய் பலியானார். 6 காவலரண்களும் சேதமாக்கப்பட்டன.

விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்: ரி. 56-1, மகசீன்-6, ஜி எம். ரவைகள் 167, ஜே. ஆர் கைக்குண்டு-1. [பூ]

## சிங்கள கிராமங்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாவட்டங்களிலுள்ள முப்பத்தியேழுகிராமங்களுக்கு இந்த மேலதிக பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. [ரி]

## பொலிஸ்

.[1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் மீதும் இலங்கைப் பொலிஸாரினால் நடத்தப்பட்ட துன்புறுத்தல் தொடர்பாக இந்தியாவிடம் இலங்கை அரசு ஏற்கனவே கவலை தெரிவித்தது தெரிந்ததே.

இச்சம்பவங்கள் துரதிஷ்டவசமானவை என்று வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இந்தியாவிடம் வருத்தம் தெரிவித்தார் (ரி)

## மிதிவெடியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமி ஒருவர் தனது இடது காலை இழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்வராஜா சுகந்தி என்ற சிறுமியே இவ்வாறு காலையிழந்தவராவர். [பூ]

## ஊர்காவற்றுறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

இத்தாக்குதலில் இராணுவத் தரப்பில் உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரியவருகிறது.

இதேவேளை நேற்றுமாலை வரை காரைநகர், மற்றும் தீவுப்பகுதிகளை நோக்கி ஷெல் பீரங்கி தாக்குதல் நடத்தப்பட்டது. (75-56)

# மூன்று ராணுவம் பலி, பலர் படுகாயம்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடந்த 48 மணித்தியாலங்களில் இடம்பெற்ற சண்டைகளில் மூன்று இராணுவத்தினர் பலியானார்கள் எனவெரித்தாஸ் வானொலி தெரிவித்தது

இரு மாகாணங்களில் நடைபெற்ற புலிகளுடனானமோதல்களில் பல ராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


# அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பயிற்சிநெறி 1990/91

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பயில்நெறிக்கு 101 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களது சொந்த முகவரிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் தமது பதிவிற்கான ஆவணங்களுடன் பல்கலைக்கழகத் தேர்வுகளும் அனுமதிகளும் கிளைக்கு 91 04 29 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 9.00 மணிக்கு நேரடியாக சமூகமளிக்கவும்.

மேற்கூறப்பட்ட திகதியில் பதிவுசெய்யத் தவறிய மாணவர்கள் பதிவு செய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்.

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பயில்நெறியின் தொடக்கவிழா 1991.05.01 புதன்கிழமை முற்பகல் 8.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்

- பதிவாளர்

25.04.91. [எ 1432]



இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Regesteted as a News Paper at the General Post office Sri Lankaunder Licence numper B/100306/81.